முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 951

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

07.05.2022, சனிக்கிழமை

1. தர்மவேலி கொண்ட அரங்கனே
 தவசியாய் வாழும் தேசிகனே
 பெருமைமிக்க ஞான உலகம் படைக்க
 பிரம்ம சக்தியாய் வந்த குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
 அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
 (சுபகிருது வருடம் சித்திரை மாதம் 24 ம் நாள், 07.05.2022 சனிக்கிழமை)
 வரமென அரங்கன் நீ இந்த
 வையகத்தை வழி நடத்தி காக்க
3. சரவணச்சுடரேற்றி உலகோர்க்கு அருள
 சற்குருவாய் அரங்கன் உன் சக்திக்குள் யானும்
 யானும் இணைந்து உலகோர்க்கு
 நல்லருளாசி தந்து வருகின்றேன்
4. ஞானமாக நீ தரும் உபதேசத்தில்
 நல் சூட்சுமமாய் யான் இருந்து அருள்புரிகின்றேன்
 அருளாக அரங்கன் வழி வரமாக அனுகுவார்க்கு
 ஆறுமுகன் இறங்கி அற்புதம் நடத்துகின்றேன்
5. நடத்தவே அரங்கன் நீயே
 ஞானயுகம் படைக்க வந்த மாதவசி
 இடரின்றி உன்வழி உலகோர் ஏற்றால்
 இந்த உலகம் சடுதி பெருமாற்றம் காணும்
6. தடையற உன் ஞானமும் தர்மமும்
 தரணியை தனிப்பெரும் சக்திமிக்க உலகமாக
 ஆகவே மாற்றி அற்புதம் நடத்தும்
 ஆறுமுகன் என் தலைமையில் ஞான ஆட்சி அரங்கன் உன் சேவையால் சடுதி மலரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–